# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of civil procedure)

IN THE COURT OF SUBORDINATE JUDGE,

KEERANUR

CASE NO.OS.No. 47/2022

Deposition of witness of Plaintiff – P.W.1(மாமுண்டி)

16.10.2023

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

வழக்கு தொடர்பான விவரம் தெரிந்துதான் வழக்கறிஞரிடம் விவரம் சொல்லி நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். தாவா 1 வது அயிட்ட சொத்து என்னுடைய சொத்து என்றும் 2 வது அயிட்ட சொத்து பிரதிவாதிகளின் சொத்து என்றும் பிரதிவாதிகளின் சொத்தின் வழியாக தண்ணீர் குழாய் செல்வதை தடுக்ககூடாது என பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் என்ன எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. எனக்கு படிக்க தெரியாது. தாவா சொத்தில் கிணறு மற்றும் ஆழ்குழாய் கிணறு உள்ளது என்பதற்கும் அவற்றின் வழியாக பாசனம் நடைபெறுகிறது என்பதற்கும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும் ஆவணம் தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இலுப்பூர் காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகார் மனு வா.சா.ஆ.8 பிரதிவாதிகள் நிலத்தின் வழியாக சென்ற 13 பைப்புகளை 25.08.2019 ம் தேதி 100 மீட்டர் நீளத்திற்கு தோண்டி எடுத்து அப்புறப்படுத்தி உடைத்து மற்ற இடங்களிலும் பைப்புகளை அடித்து உடைத்து விவசாயம் நடக்காமல் செய்துவிட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விவரத்தை வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது சொத்தின் வழியாக தண்ணீர் பாய்ச்சி வருகிறேன் என்றால் எனது இடத்திலும் செல்கிறது. பிரதிவாதிகள் இடத்தின் வழியாகவும் செல்கிறது. பிரதிவாதிகள் இடத்தின் வழியாக தண்ணீர் குழாய் செல்லவில்லை என்றும் குழாய் செல்வதாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. ஆழ்குழாய் கிணறு உள்ளதாக சொல்லும் இடத்திற்கும் தண்ணீர் பாய்ச்ச வேண்டும் என நான் குறிப்பிடும் இடத்திற்கும் இடையே 10,000 மீட்டர் தூரம் இருக்கும் என்றால் இல்லை. 8000 மீட்டர் தூரம் இருக்கும். 8000 மீட்டர் என்பது மிக நீண்ட தொலைவு என்றால் சரிதான். அவ்வாறு குழாய் பதித்துள்ளதற்கு குழாய் வாங்கியதற்கான ரசீதோ அல்லது குழாய் பதித்ததற்கான செலவு ரசீதோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவ்வாறு குழாய் பதிக்கவில்லை என்றும் அவ்வாறு குழாய் செல்லவில்லை என்றும் அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 1 வது அயிட்ட சொத்திற்கும் பிரதிவாதிகள் சொத்திற்கும் இடையே வேறு நபர்களின்

சொத்துக்கள் உள்ளது என்றும் நான் குறிப்பிட்டுள்ளது போல் சொத்துக்களின் அமைப்பு இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையில் நான் சொல்லியுள்ளது போல் குழாய் பதிக்கவில்லை என்றும் தண்ணீர் செல்லவில்லை என்றும் அவ்வாறு தண்ணீர் செல்வதாக நான் கற்பனையாக சொல்வதாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் நிலத்தில் குழாய் பதித்தால் சுமார் 1 ஏக்கர் அளவிற்கு பாதிக்கப்படும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 புகாரின் படி எனக்கு சொந்தமான குழாயை 21 நபர்கள் அடித்து உடைத்ததாகவும், எடுத்துச்சென்றுவிட்டதாகவும், சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த 21 நபர்களில் 5 நபர்களுக்கு எதிராக மட்டுமே வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கு எதிராக நானும் எனது சகோதரியும் சேர்ந்து பல வழக்குகள் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். பிரதிவாதிகள் மீது பல்வேறு புகார்கள் மற்றும் வழக்குகள் தாக்கல் செய்து தொல்லை கொடுத்து வருவதுபோல் இவ்வழக்கையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 ன்படி பார்க்கையில் நான் சொல்வதுபோல் 1 வது அயிட்ட சொத்துக்கள் 2 வது அயிட்ட சொத்துக்களுக்கு அருகில் தொடர்ச்சியாக அமையவில்லை என்றால் சரியல்ல. அதனால்தான் அடங்கல் மற்றும் அ பதிவேடு நகல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து தாவா சொத்துக்களை பார்வையிட்டால் நான் சொல்வது போல் ஆழ்துளை கிணற்றில் இருந்து தண்ணீர் குழாய்கள் செல்வது தெரியவரும் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் நியமனத்திற்கு நடவடிக்கை எடுக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். நான் பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்ககூடியது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

(மறுவிசாரணை இல்லை.)